**சேலம் வணிகவரி மாவட்ட துணைஆணையர்(மாவ)(முகூபொ), செயல் முறைகள்**
**பிறப்பிப்பவர் : திரு.பொ.தனசேகரன்,B.Sc., M.A., M.B.A.,**

**செ.மு.ந.க.4118/2018/அ2** **நாள்: 27.07.2021**

**பொருள்:** பொதுப்பணிகள் - வணிகவரித்துறை - சேலம் வணிகவரி மாவட்டம் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 2015-2016ம் ஆண்டுக்கான தொகுதி- IVல் அடங்கிய இளநிலை உதவியாளர்கள் பட்டியல் வரப்பெற்றது - பணியேற்பு ஆணை வழங்கியது - பணியில் சேர்ந்து கொண்டது - பணிவரன் முறை செய்து தகுதிகாண் பருவம் துவக்கி ஆணை வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை:**
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-6 அவர்களின் கடிதம் எண்: 5611/பி.எஸ்.டி-டி1/2017, நாள்: 25.09.2017.
2. இணை ஆணையர் (மா.வ.), சேலம் கோட்டம், சேலம் அவர்களின் செ.மு.ந.க. 4294/2017/அ2, நாள்:12.10.2017.
3. இவ்வலுவலக செ.மு.ந.க.4106/2017/அ1, நாள்: 27.10.2017.
4. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை -9 அவர்களின் கடித எண்.17451/CV-2/2018-4, நாள்: 06.07.2021

***

**ஆணை:**

பார்வை 1-இல் காணும் கடிதத்தின் படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 2015-2016ம் ஆண்டுக்கான தொகுதி- IVல் அடங்கிய தேர்வின் மூலம் தெரிவு செய்து பார்வை 2-ல் காணும் இணை ஆணையர் (மா.வ), சேலம் கோட்டம், சேலம் அவர்களின் செயல்முறை ஆணைகளின் படி இவ்வணிகவரி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை-3ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணைகளின் படி பணி நியமனம் வழங்கப்பட்டு பணியில் சேர்ந்து கொண்டுள்ள இவ்வலுவலக இளநிலை உதவியாளர் கா.கோ.சுரேஷ்குமார் என்பவருக்கு பார்வை 4-இல் காணும் கடிதத்தின்படி இந்து-மலையாளி சாதிச் சான்றின் மெய்த்தன்மைச் சான்று வரப்பெற்றதை தொடர்ந்து கீழ்க்கண்டுள்ளவாறு பணி வரன்முறை செய்தும் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியாளர்களின் பெயர் மற்றும் பதவி (திருவா.) | தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்து கொண்ட நாள் | பணி வரன் முறை செய்து தகுதி காண் பருவம் துவக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| 1. | கா.கோ.சுரேஷ்குமார், இளநிலை உதவியாளர். | துணை ஆணையர் (மா.வ), சேலம். | 31.10.2017 முற்பகல் | 31.10.2017 முற்பகல் |

மேலும் இப்பணியாளர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் தொடர்ந்து மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு காலத்திற்கு தகுதி காண் பருவத்தினராக இருக்க வேண்டுமென ஆணையிடப்படுகிறது.

துணை ஆணையர்(மா.வ)(முகூபொ),
சேலம்.

**பெறுநர்:**
உரிய பணியாளர்.

**நகல்:** இணை ஆணையர்(மாவ), சேலம் கோட்டம், சேலம் அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.

இருப்புக்கோப்பு